# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## இலங்கையில் புத்த பெருமானின் புனித தேவ்னிமோரி சின்னங்களின் தரிசனம்

கொழும்பு கங்காராமை விகாரையில் 2026 பெப்ரவரி 04ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை புனித தேவ்னிமோரி சின்னங்கள் தரிசனத்துக்காக வைக்கப்படவுள்ளன

குஜராத் ஆளுநர் ஸ்ரீ ஆச்சார்ய தேவ்ரத் மற்றும் குஜராத் துணை முதல்வர் ஸ்ரீ ஹர்ஷ் சங்கவி ஆகியோர் இந்திய பேராளர்களுக்கு தலைமை வகிக்கின்றனர்

2025 ஏப்ரல் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த நிலையில் இந்தியப் பிரதமர் அவர்கள் வெளிப்படுத்திய தொலைநோக்கின் தொடர்ச்சியாக, இலங்கையில் நடைபெறவுள்ள புத்த பெருமானின் புனித தேவ்னிமோரி சின்னங்களின் தரிசனம் மூலம், ஆன்மீக வெளிப்பாடு மற்றும் கலாசார இராஜதந்திரத்தின் ஆழமான சமிக்ஞையை இந்தியா வெளிப்படுத்துகின்றது. வதோதராவில் உள்ள பரோடாவின் மகாராஜா சாயாஜிராவ் பல்கலைக்கழகத்தில் தற்போது வைக்கப்பட்டிருக்கும் இப் புனித சின்னங்கள், 2026 பெப்ரவரி 4 முதல் 10ஆம் திகதிவரை பொது மக்களின் தரிசனத்துக்காக கொழும்புக்கு கொண்டுசெல்லப்படவுள்ளதுடன், 2026 பெப்ரவரி 11 ஆம் திகதி அன்று மீண்டும் அங்கிருந்து நாடுதிரும்பும். இந்த புனித பயணம் பௌத்த மதத்தின் பிறப்பிடமான இந்தியாவின் நிலைபேறான நாகரிகப் பொறுப்புணர்வை சுட்டிக்காட்டும் அதேநேரம் இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான ஆழமான ஆன்மீக, கலாசார மற்றும் மக்கள் - மக்கள் இடையிலான பிணைப்புகளை மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

2. இப்புனித சின்னங்களுடன் குஜராத் ஆளுநர் ஸ்ரீ ஆச்சார்ய தேவ்ரத் மற்றும் குஜராத் துணை முதல்வர் ஸ்ரீ ஹர்ஷ் சங்கவி ஆகியோர் தலைமையிலான உயர் மட்ட இந்திய பேராளர்கள், சிரேஸ்ட துறவிகள் மற்றும் அதிகாரிகளும் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்கின்றனர். நிறுவப்பட்ட நெறிமுறைகள் மற்றும் சின்னங்களுக்கு வழங்கப்படும் புனிதத்தன்மைக்கு அமைவாக, அச்சின்னங்கள் இந்திய

விமானப்படையின் விசேட விமானத்தில் பூரண அரச மரியாதையுடன் இவ்விஜயத்தினை மேற்கொள்கின்றன, இவ்வாறன விஜயமானது இந்தியா தனது புனித மரபுகளை நிலைநிறுத்தும் மரியாதையை பிரதிபலிக்கின்றது. இந்நிலையில் இவ்விஜயத்தில் இணைந்திருக்கும் பேராளர்கள் கொழும்பில் நடைபெறும் சம்பிரதாயபூர்வமான, மத மற்றும் உத்தியோகபூர்வ நிகழ்வுகளில் கலந்துகொள்கின்றனர், இந்நிகழ்வுகளில் இச்சின்னங்களின் தரிசனத்தின் அங்குரார்ப்பணம் மற்றும் இந்தியாவின் பௌத்த மரபு மற்றும் அதன் சமகால கலாசார ஈடுபாடுகளை எடுத்துக்காட்டும் கண்காட்சிகள் ஆகியவையும் அடங்குகின்றன.

3. இலங்கையின் மிகவும் தனித்துவமானதும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்ததுமான பௌத்த விகாரைகளில் ஒன்றான கொழும்பில் உள்ள புனித கங்காராமை விகாரையில் இப்புனித சின்னங்கள் பொதுமக்களின் வழிபாட்டிற்காக வைக்கப்படும். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சங்கைக்குரிய ஹிக்கடுவே ஸ்ரீ சுமங்கள நாயக்க தேரர் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட இந்த விகாரை, வழிபாடு, கற்றல் மற்றும் கலாசார பரிமாற்றங்களுக்கான ஒரு கேந்திர நிலையமாக உருவாகியுள்ள நிலையில் இவ்வாறான தரிசனங்களுக்கு பொருத்தமான மற்றும் சூழலை வழங்குகிறது. கலாச்சார நெறிமுறைகள், வரலாறு மற்றும் நாளாந்த வாழ்க்கையை பௌத்தம் வடிவமைக்கும் ஒரு நாட்டில், நடைபெறும் இச்சின்னங்களின் தரிசனம் இலங்கை முழுவதும் உள்ள பக்தர்கள் மத்தியில் ஆழமாக எதிரொலிக்கும் அதேவேளை இரு நாடுகளின் பகிரப்பட்ட பௌத்த மரபை மேலும் வலுப்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

4. தேவ்னிமோரி சின்னங்கள் குஜராத்தின் ஆரவ்லி மாவட்டத்தில் ஷாம்லாஜிக்கு அருகில் அமைந்துள்ள மகத்தான வரலாற்று மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்த தளமான தேவ்னிமோரி தொல்பொருள் தளத்திலிருந்து மீட்கப்பட்டன. 1957 ஆம் ஆண்டு புகழ்பெற்ற தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் எஸ்.என். சௌத்ரி முதன்முதலில் மேற்கொண்ட அகழ்வாராய்ச்சியில், பொது யுகத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் மேற்கு இந்தியாவில் புத்த மதம் செழிப்படைந்தமைக்கு சான்றாக திகழும் முக்கியமான பௌத்த கட்டமைப்புகள் மற்றும் சின்னங்கள் இங்கு வெளிப்பட்டன. இந்த சின்னங்கள் விலைமதிப்பற்ற தொல்பொருள் பொக்கிஷங்களாக பிரதிபலிக்கின்றமை மட்டுமல்லாமல், புத்த பெருமானின் காலத்தால்

அழியாத போதனைகளான அமைதி, இரக்கம் மற்றும் நல்லிணக்கத்தின் ஒரு வாழும் சின்னங்களாகவும் அவை உள்ளன.

5. தேவ்னிமோரி தூபியின் அடிப்பகுதியில் இருந்து 24 அடி உயரத்தில் காணப்படும் இச் சின்ன்ங்களின் பேழையானது பச்சை நிற படிமங்களால் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மீது பிராமி எழுத்து மற்றும் சமஸ்கிருத மொழியில் பொறிக்கப்பட்டுள்ள "தசபல ஷரீர நிலய்" என்பது புத்த பெருமானின் உடல் சார்ந்த சின்னங்களின் இருப்பிடம் என்பதை குறித்து நிற்கின்றது. புனித அஸ்தி, பட்டு துணி மற்றும் மணிகளுடன் கூடிய கரிமப் பொருட்களைக் கொண்ட ஒரு செப்புப் பெட்டி இங்கு உள்ளது. இப்பேழை மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது, பேழை அமைப்பு (6.8″ அடித்தளம், 2.9″ உயரம், 4″ விட்டம்), மூடி (6.7″ விட்டம், 1.05″ தடிப்பு , 0.7″ உயரம்), மற்றும் வட்டமான மேற்புறம் கொண்ட ஒரு குமிழ் (0.66″ உயரம், 1.1″ விட்டம்).

6. இங்குள்ள, செப்புப் பேழை ஒரு தட்டையான மேற்புறத்தையும், மேற்புறத்தில் பொருத்தப்பட்ட ஒரு மூடியுடன் கூடிய அடித்தளத்தையும் கொண்டுள்ளது, அத்துடன் பட்டுத் துணி, தங்க முலாமிடப்பட்ட வெள்ளி-செப்பு போத்தல், புனித அஸ்தியுடனான கரிமப் பொருள் மற்றும் உறையாக பயன்படுத்தப்படும் கறுப்பு களிமண் ஆகியவற்றையும் கொண்டிருந்தது. சிறிய ஆம்போரா போன்ற தங்க முலாமிடப்பட்ட அடித்தளம், உருளை வடிவம் மற்றும் சிறிய கழுத்து போன்ற வடிவிலான பாகத்துடனான திருகு வகை சிறிய மூடியும் இதில் காணப்படுகின்றது.

7. இவ்வாறான பின்னணியுடன், குறித்த புனித சின்னங்கள் உலர் கலத்தில் வைக்கப்பட்டுள்ளன. உள்ளே இருக்கும் பொருள் மேலும் பழுதடைவதை தடுக்கும் வகையில் காற்றுப் புகாத கண்ணாடியால் மூடப்பட்டுள்ளது. தங்கமுலாமிடப்பட்ட வெள்ளி-செம்பு போத்தல் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஒரு பருத்தி அடித்தளத்தில் பட்டுத் துணியுடன் இச்சின்னங்கள் வைக்கப்பட்டுள்ளன.

8. இச்சின்னங்களின் ஆன்மீக முக்கியத்துவத்திற்கு அப்பால், இலங்கையில் புனித தேவ்னிமோரி சின்னங்களின் தரிசனம் இடம்பெறுகின்றமை இந்தியாவின் கலாசார இராஜதந்திரத்தை முன்னேற்றுவதன் மூலமும், அதன் மக்களை மையமாகக் கொண்ட வெளிவிவகாரக் கொள்கையை வலுப்படுத்துவதன் மூலமும் இது ஒரு முக்கிய இராஜதந்திர நோக்காகவும் அமைகின்றது. இலங்கையுடன்

அதன் மிகவும் புனிதமான பௌத்த மரபை பகிர்ந்து கொள்வதன் மூலம், பகிரப்பட்ட நம்பிக்கை, வரலாறு மற்றும் பெறுமானங்களில் ஆழ வேரூன்றிக் காணப்படும் இருதரப்பு உறவின் நாகரிக அடித்தளங்களை இந்தியா சுட்டிக்காட்டுகிறது. இந்த தரிசனம் மென் அதிகாரத்தின் ஆதிக்கம் மிக்க கருவியாக செயல்பட்டு மக்களுக்கும் மக்களுக்கும் இடையிலான ஆழமான தொடர்புகளை வளர்த்து, பரஸ்பர நம்பிக்கையை மேம்படுத்தி, ஆழமான கலாசார மற்றும் உணர்வு ரீதியான பிரதிபலிப்புகளுடனான முறையான இராஜதந்திர ஈடுபாடுகளை நிறைவேற்றுகின்றது. அத்துடன் உலகளாவிய பௌத்த மரபின் பொறுப்பான பாதுகாவலராக இந்தியாவின் பங்கை இது மீண்டும் உறுதிப்படுத்துகிறது, மற்றும் இந்து சமுத்திர பிராந்தியத்தில் பிராந்திய நல்லிணக்கத்தை வலுப்படுத்துகிறது. அதே நேரத்தில் தெற்காசியாவில் அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் கூட்டுறவு சகவாழ்வு பற்றிய இந்தியாவின் நோக்கில் பெறுமதிமிக்க பங்காளராக இலங்கையின் இடத்தையும் வலுப்படுத்துகிறது.

9. இலங்கையில் நடைபெறவிருக்கும் இப்புனித சின்னங்களின் தரிசனம், இந்தியாவின் பௌத்த மரபை உலகத்துடன் பகிர்ந்து கொள்ளும் நிலையான பாரம்பரியத்தை உருவாக்குகிறது. அண்மைய ஆண்டுகளில், தாய்லாந்து, மொங்கோலியா, வியட்நாம், ரஷ்யா மற்றும் பூட்டான் போன்ற நாடுகளில் புத்த பெருமானின் புனித நினைவுச்சின்னங்கள் வெற்றிகரமாக தரிசனத்துக்காக வைக்கப்பட்டன, இதன் மூலம் மில்லியன் கணக்கான பக்தர்கள் ஈர்க்கப்பட்டு, மக்களிடையேயான தொடர்புகள் வலுவடைகின்றன. பிரதமரால் விலைமதிப்பற்ற தேசிய பொக்கிஷங்களின் மீள் வருகை என பாராட்டப்பட்ட புனித பிப்ரஹ்வா ஆபரண சின்னங்கள் அண்மையில் பரவலாக கொண்டாடப்பட்டு இந்தியாவிற்கு வரவழைக்கப்பட்டமையை தொடர்ந்து இலங்கையில் புத்த சின்னங்களின் தரிசனம் நடைபெறுகிறது.

10. இந்த தரிசனத்தின் மூலம், இந்தியா மீண்டும் ஒருமுறை புத்த தம்மத்தின் உலகளாவிய செய்தியை, அதாவது அகிம்சை, கருணை மற்றும் சகவாழ்வு, என்பவற்றை வெளிப்படுத்துகிறது, அதே நேரத்தில் கலாசார இராஜதந்திரம் மற்றும் உலகளாவிய நல்லிணக்கத்திற்கான அதன் உறுதிப்பாட்டையும் மீண்டும் உறுதிப்படுத்துகின்றது. தேவ்னிமோரி சின்னங்களின் இலங்கைக்கான விஜயம் அமைதியின் சக்திவாய்ந்த அடையாளமாகவும், பகிரப்பட்ட ஆன்மீக மரபின்

கொண்டாட்டமாகவும், பல நூற்றாண்டுகள் பழமையான நாகரிக உறவுகள் மற்றும் பரஸ்பர மரியாதையில் வேரூன்றிய இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான விசேட மற்றும் நிலைபேறான நட்பை மீண்டும் உறுதிப்படுத்துவதாகவும் அமைகின்றது.

***

கொழும்பு
02 பெப்ரவரி 2026

மூலம்: https://www.pib.gov.in/PressReleasePage.aspx?PRID=2222243®=3&lang=2